# சித்தர்கள் கண்ட இரசவாதக் கலை

31

**முனைவர் கோ.சுரேஷ்**
**இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்**
**வி.எல்.பி.ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**கோவைப்புதூர்-6741042.**

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தர்கள் சாதி, மதம், மொழி, இனம், பற்று, இன்பம், துன்பம், பசி, நோய், பழி, புகழ், பகை, நட்பு ஆகிய எல்லாவற்றையும் கடந்தவர்கள். புரியும் மொழியில், புரியாத சிந்தனைகளை வழங்கியவர்கள். இளமை, செல்வம், புகழ், உடல் எல்லாம் அழியக்கூடியது என்பதை உணர்ந்து, இளம் வயதிலேயே துறவறம் பூண்டு, உடம்பைப் பேணிக்காத்து வலிமைப்படுத்தி, நோய் நொடிகள் இன்றி நீண்ட நாட்கள் வாழ வேண்டியதை வலியுறுத்தியவர்கள். பதினெட்டு சித்தர்களும் தங்களது சிந்தனைத் தேடல்கள் மூலம் இவ்வுலகுக்குப் வழங்கிய கொடைகள் ஏராளம். அவற்றுள் உடலை வலிமைப்படுத்தவும், ஒரு பொருளை இன்னொரு பொருளாக மாற்றவும் செய்யும் இரசவாதக்கலையும் ஒன்றாகும். அதனைக் கொண்டு உடலைப் பொன்னிறமாக மாற்றவும், செயற்கையாகத் தங்கம் மற்றும் பித்தளையை உருவாக்கவும் அறிந்திருந்தனர். இருப்பினும் பின்வரும் காலத்தினர் அவற்றைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக மறைமுகமாக அவற்றைக் கூறிச் சென்றுள்ளனர். அவற்றைப் பற்றி அறியும் ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

உலகப் புகழ்பெற்ற இறைக்கோட்பாட்டிற்கும், சைவ நெறிக்கும் முன்னோடியாக இருந்து அவற்றை இணைக்கப் பாலம் சமைத்தவர்கள் சித்தர்கள். அத்தகையவர்கள் பெற்றோர், மனைவி, குழந்தை என்ற குடும்பப் பற்றையும், செல்வம், பதவி என்ற ஆசைப் பற்றையும், நாடு, இனம், மொழி, என்ற பாசப்பற்றையும் துறந்து தங்களை இயற்கையோடு நிலைநிறுத்திக் கொண்டவர்கள். தங்களது உயர்ந்த இரசவாதக் கலை, மாந்தரீகம் போன்ற சிந்தனைகளை முதிர்ச்சி அற்றவர்கள் அறிந்து கொண்டு அவற்றைத் தவறான வழிகளில் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக அவற்றை மறைபொருளாகவும், இலைமறைக் காயாகவும் தம் பாடல்களில் கூறிச் சென்றுள்ளனர். மேலும் உடல் மனம் மற்றும் ஆன்மாவை உறுதிப்படுத்தி இறைவனை (மெய்ஞானத்தை) அடைவதற்கான வழிகளையும் கண்டறிந்து கூறிச் சென்றுள்ளனர். உளவியல், ஆன்மீகம், மருத்துவம் ஆகியவற்றில் மனத்தை நிலை நிறுத்தி அவற்றைக் கொடையாக உலகிற்கு வழங்கிய சித்தர்களால் உருவாக்கப்பட்ட பழமையான மரபுகளில் ஒன்றுதான் ரசவாதக்

கலையாகும். அது அறிவு மற்றும் தத்துவத்தின் அங்கமாக விளங்கக் கூடியது. அத்தகைய ரசவாதக் கலையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சித்தர்கள் விளக்கம்**

ஆதிகாலந்தொட்டு ஆன்றோர்களும், சான்றோர்களும் தோன்றி இவ்வுலகை வழி நடத்தி வந்துள்ளனர். அத்தகையவர்களே வழிகாட்டிகளாகவும், ஞானிகளாகவும் திகழ்ந்துள்ளனர். அந்த வகையில் முற்றும் துறந்த முனிவர்களும், சித்தர்களும் சிந்தனை ஆற்றல் உடையவர்களாகவும் சித்தாற்றலில் வல்லவர்களாகவும், மெய்ஞான ஆற்றல் கொண்டவர்களாகவும் விளங்கி இவ்வுலகிற்குப் பலவற்றை வழங்கியுள்ளனர். இவர்கள் மருத்துவம், வானியல், யோகம், ஜோதிடம், ஞானம், தந்திரம், ரசவாதம் ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், எவ்வுயிர்களுக்கும் தீங்கு விளைவிக்காதவர்களாகவும், மறைவாழ்க்கை மேற்கொண்டவர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

சித்தர் என்ற சொல்லை முதன் முதலில் திருமூலர் தனது நூலில் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். ஆகவே அவரது காலமே சித்தர்கள் காலமாகக் கணக்கிடப்படுகிறது. சித்தர்களின் எண்ணிக்கை எண்ணற்றதாக இருந்தாலும் தமிழ்நாட்டில் சித்தர்களின் எண்ணிக்கை பதினெட்டு ஆகக் கருதப்படுகிறது. ஆனால் அந்த பதினெட்டுச் சித்தர்கள் யார்? என்பது இன்றுவரையிலும் குழப்பமாகவே உள்ளது. கும்பமுனி, தேரையர், சிவவாக்கியர், சண்டிகேசர், கோரக்கர், காகபுசுண்டர், மச்சமுனி, புலிப்பாணிச்சித்தர், கொங்கணர், குதம்பை, பாம்பாட்டி, இடைக்காடர், போகர், திருமூலர், அகத்தியர், சட்டை முனி, அகப்பைச் சித்தர், பத்திரகிரியார், பட்டினத்தார், கடுவெளியார், ராமதேவர் இவ்வாறாக சித்தர்களுடைய பட்டியல் தொடர்கிறது. “சித்தர்கள் என்போர் பேய் போல் திரிந்து, பிணம் போல் கிடந்து, இட்ட பிச்சை எல்லாம் நாய் போல் அருந்தி, நரி போல் அலைந்து, நன் மங்கையரைத் தாய்போல் கருதும் தன்மையர் என்பார். பட்டினத்தார்."[1] எல்லாம் வல்ல சித்தி வாய்க்குப் பெற்றவரே சித்தர்" என்பார் இராமலிங்க அடிகளார். "தம்முடைய உடம்பை அப்படியே வைத்து விட்டு மற்றோர் உடம்பிலே புகுந்து நடனமாடும் வல்லன்மை படைத்தவர்கள் சித்தர்கள் என்பார் சாமி சிதம்பரனார்."[2] இவர்கள் தத்துவஞானிகள், மெய்யுணர்வு பெற்றவர்கள் இவர்களில் சிலர் யோகிகளாய்ச் சிறப்புப் பெற்றவர்கள் சிலர் மருத்துவர்களாய் விளங்கியவர்கள் என்பார் மு.வ."[3]

**வெண் தளையில் ரசம் வைத்து ஐந்து லோகத்தையும்**

**வேதித்து விற்றுண்ணலாம் வேறொருவர்**
**காணாமல் உலகத்துலா வலாம்**
**விண்ணவரை ஏவல் கொள்ளலாம்**
**சந்தமும் இளமையோ டிருக்கலாம்**
**மற்றொரு சரீரத்திலும் புகுதலாம் "**[4]

என்பார் தாயுமானவர்.

**ஓடலாம் அட்சமுமாம் ரசத்தைக்கேளு**
**உத்தமனே பதினொருக்கால் விடுவித்தாக்கால்**
**ஆடலாம் அட்டமா சித்தி யெட்டும்**
**அணிமாவும் கரிமாவும் லகிமாவோடு**
**தேடலாம் மகிமாவும் பிரார்த்தியோடு**
**சேர்ந்தாட்டு மாடலாம் செய்யக்கேளு**
**நீடலாம் பூரணத்தில் சென்றுபுக்கி**
**நிலைக்கலாம் திரும்பலாம் நீங்கள்கேளே"**[5]

என்பார் கொங்கணர். இன்னும் சிலர் மணி, மந்திரம், மருந்து இவற்றோடு தியானத்திலும் ஈடுபட்டு மரணம் இல்லா வாழ்வைப் பெற்றவர்கள் சித்தர்கள் என்பர்.

**ரசவாதக்கலை**

மதிப்புக் குறைந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றுவது என்பது தற்காலத்தில் நிகழ்த்த முடியாத ஒன்று என்று கருதினாலும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனைச் சாதித்தவர்கள்தான் சித்தர்கள். இத்தகைய கலையானது அரேபியா, சீனா, எகிப்து போன்ற மேலை நாடுகளிலிருந்து இங்கு பரவியிருக்கலாம் என்பர். இச்சொல் தமிழ்ச்சொல் போன்று காணப்படாததின்றும் இதனை அறியலாம். சிவனின் ஆடற்கலைகள் 64 ல் 54 ஆவது கலையாக இரசவாதக்கலை (சிவக்கலை) போற்றப்படுகிறது. ரசம் என்பது பலவகை பொருள்களின் கூட்டு என்பதை அனைவரும் அறிந்ததே. அவ்வாறு பல வகைப் பொருள்கள் சேர்க்கப்படும் போது அது பல வகை சுவையாகவும், பல வகை நிறம் கொண்டதாகவும் மாறும். அதுபோலவே தான் சில வகை நிறங்களை மட்டுமே வைத்துக்கொண்டு, அவற்றை ஒன்றோடு ஒன்று கலந்து பல வகை நிறங்களை உருவாக்குகின்றனர். இம்முறையில் தான் சித்தர்களும் ஒரு பொருளோடு இன்னொன்றை கலந்தால் அது தன்னிலை இழந்து வேறு பொருளாகக் காட்சியளிக்கும் என்றும், ஆனாலும் அப்பொருளின் தன்மை மாறாது என்பதனையும் கண்டறிந்துள்ளனர்.

தற்காலங்களில் ஆய்வகங்களில் மருந்துப் பொருட்களை விலங்குகளுக்குச் செலுத்திப் பரிசோதிப்பதைப் போல அன்றையக் காலத்தில் உயிரற்ற பொருட்களில் தன் பரிசோதனையை மேற்கொண்டுள்ளனர். சித்தர்களின் இரசவாதக் கலை இன்றைய வேதியியல் ஆய்வக

முறைகளோடு ஒத்துப்போவதை அறியமுடிகின்றது. அக்காலத்தில் பாதரசமானது தங்கத்தை உருவாக்கும் செயல்பாட்டில் மிக முக்கியப் பங்கு வகித்துள்ளது. அதனாலேயே இக்கலையைத் தமிழில் இரசவாதம் என்று அழைத்தனர். இதனை இரசம், பாதரசம், தங்க வித்தை எனப் பல பெயர்களால் அழைத்துள்ளனர். சித்தர்கள் இரும்பையும் பொன்னாக மாற்றியுள்ளனர். கல்லையும் பொன்னாக மாற்றியுள்ளனர். இதைப் பின்வரும் காலத்தார் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக அதன் பொருளைப் பாடல்களில் மறைபொருளாகக் கூறிச் சென்றுள்ளனர். இதனைக் கீழ்க்கண்ட பாடல் மூலம் உடலின் நிலையாமையை மறைபொருளாகக் கூறுகிறார் கடுவெளிச் சித்தர்.

**“நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தா னொரு தோண்டி - மெத்தக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"**[6]

இதுபோலப் பல செய்திகளைப் பல சித்தர்களும் இலைமறைகாயாகக் கூறிச் சென்றுள்ளனர்.

கிரேக்கம், சீனம், ஐரோப்பா, அரேபியா போன்ற நாடுகளில் தங்கம் தயாரிக்கும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தனர். ஆனால் இங்கிலாந்தில் ஐந்தாம் ஹென்றி என்ற மன்னர் ரசவாதக் பயிற்சியை தடை செய்தும், அதனை மீறி மேற்கொள்பவர்கள் தண்டிக்கப்படுவர் என்றும் அறிவித்து இருந்தார். அதே வேளையில் பெருநாட்டைச் சார்ந்த இரண்டாம் ரூடால்ப் என்ற அரசன் தனது அரண்மனையில் பல்வேறு ரசவாதிகளைக் கொண்டு சோதனை செய்து, தயார் செய்யச் சொல்லி அவர்களுக்குப் பரிசுகளையும் வழங்கியுள்ளார். நீர்ம வடிவத்தில் இருக்கும் பாதரசத்தைத் திடப்பொருளாக்கும் கலையில் சித்தர்கள் அக்காலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஓடும் பாதரசதத்தை ஓடாத திடப்பொருளாக்கி குளிகை, மருந்து, தங்கம் செய்வது குறித்தும் பாடியுள்ளனர். சித்தர்கள் தங்கத்திற்காக ஆசைப்பட்டு இதனைக் கையாண்டிருக்க வாய்ப்பு இல்லை. உடலில் இருக்கும் உலோகங்களின் தன்மையை மாற்றி அமைத்து, அதனைப் பொன் உடம்பாக மாற்றவும் மரணமிலா வாழ்வைப் பெறவும் இதனை பயன்படுத்தி இருக்கலாம் என்பர். பலவகை மூலிகைகளின் சாறு கொண்டு அரைத்து புடம் போட்டு அத்தங்கத்தை மேலும் பல மூலிகைகள் கொண்டு செந்தூரம் செய்து காப்பிட பிணி இல்லாமல் நீண்ட நாட்கள் வாழலாம் என்பது சித்தர்களது சிந்தனையாகும்.

கந்தகம், பாதரசம் போன்ற அடிப்படைக் கூறுகளை ஒருமுகப்படுத்துதல் மற்றும் இடைவிடாத வாசியோகத்தினால் அது அமிர்தத் திரவமாக மாற்றமடையும். இது பொன்னுடம்பை அடையும் பெருவழியாகும். ‘மனம் பழுத்தால் பொன் பழுக்கும்’ என்று இதனை மறைபொருளாகச் சுட்டியுள்ளனர். அடிப்படை உலோகங்களைத் தங்கமாக மாற்றும் முறை உலோகங்களின் ரசவாதமாகும். சித்தர்கள் சிடிகை வேதை, மாற்றுயர்வு வேதை, கட்டு வேதை,

குருவேதை, குளிகைவேதை, பரிசன வேதை, களங்கு வேதை எனப் பல்வேறு முறைகளைக் கையாண்டுள்ளனர். ரசவாதத்திற்கு உதகநீர் என்னும் மூலிகை நீரினைப் பயன்படுத்தியுள்ளனர் சித்தர்கள். இதனைப் பற்றிய செய்தி போகர் மலை வாகடம், கோரக்கர் மறைவாகடம், அகத்தியர் வாகடம் ஆகிய நூல்களில் காணப்படுகிறது.

**கொங்கணச் சித்தர்**

நாதவேதை என்பது ரசத்தை மணியாகக் கட்டி அதற்கு முறையான சாரணைகள் கொடி செய்து அதை வில்லைப் போல் தட்ட அந்தச் சத்தம் எவ்வளவு தெளிவாகக் கேட்குமோ அந்த நேரத்தில் தங்கமாகும். இதனைப் பரிசமணியாக மாற்றி செங்கல், சுக்கான்கல், மணல் போன்றவற்றின் முன் காட்டினால் அவை தங்கமாகும் என்கிறார் கொங்கணர். சித்தர் கூட்டத்தின் தலைவனும், ஆடலில் வல்லவனுமாகிய சிவனால் சொல்லப்பட்ட சிவநீதி என்பது, தொட்டால் ஓடக்கூடிய பாதரசத்தை புகை வராது செய்தும், அதனை மணியாகக் கட்டி சாரணை மூலம் குளிகைச் செய்தும் சித்தி வேலைக்குப் பயன்படுத்தாலம் என்பர். இச்செய்தியைக் கீழ்க்கண்ட பாடல் மூலம் விளக்குகிறார் கொங்கணர்.

**“வேதையாம் பரிசம் தன்னில்**
**விளங்கிய மணியைக் கேளு**
**ஆதையாம் லோகஞ் செங்கல்**
**அடைவுடன் சுக்கான் மண்ணும்**
**பாதையாய் காட்டு முன்னே**
**பளிச்சென்று தங்கமாகும்"7 (கொங்கணச் சித்தர் பாடல் - 173)**

**தாயுமானவர்**

தாயுமானவர் தனது நூலில் பித்தளையத் தங்கமாக மாற்றும் ரசவாதக் கலையைக் கூறியுள்ளார்.

**“கருமருவு குகையனைய காயத்தின் நடுவுட்**
**களிம்புதோ செம்பனை யான்**
**காண்டக விருக்க நீ ஞான அனல் மூட்டியே**
**கனிவுபெற உள்ருக்கிப் பருவமறிந்து நின்னருளான**
**குளிகைகொடு பரிசித்து வேதிசெய்து**
**பத்துமாற்று தங்கமாக்கியே பணி கொண்ட**
**பட்சத்தை என் சொல்லுவேன்”[8] (தாயுமானவர் பா.எண் -7)**

தாமிரம் என்ற செம்பில் இருந்து பச்சைநிறக் களிம்பை நீக்கிவிட்டால் செம்பு தங்கமாகும் என்கிறார். மேலும் பச்சை நிறக் களிம்பை நீக்குவதற்கான வழிமுறைகள்'யும் கூறுகிறார்.

**போகர்**

போகர் வைத்தியம் 700 என்ற நூலில் காந்தரசம் தயாரிப்பதைப் பற்றியும், அதனைக் கொண்டு தங்கம் செய்யும் முறையினையும் பின்வரும் பாடல் மூலம் போகர் கூறுகின்றார்.

**"ஆடவே காந்தரசம் சொல்லக் கேளு**
**அரகரா ஏழு ஊசி பிடிக்கும் காந்தம்**
**தேடியே பலம் ஒன்று மண்கலசத்திலிட்டு**
**சிறப்பாக நீலிச்சார் நிறைய வார்த்து**
**வாடவே இரவிபடாது அறைக்குள் வைத்து**
**வன்மையுடன் நாள் மூன்று முடிவை நீ**
**ஊடவே சாறு எல்லாம் காந்தம் உண்ணும்**
**உவகையுடன் அயக் குறட்டால் எடுத்திடாயே"9 (போகர் வைத்தியம் - 700)**

ஏழு வகையான இரும்புகளையும் ஈர்த்துக் கொள்ளும் அளவு காந்த சக்தியைக் கொண்ட காந்தத்தில் ஒரு பங்கு எடுத்து அதனை ஒரு மண்சட்டியில் போட்டு அதனுள் நீலிச்சாற்றை விட்டு நன்றாக மூடி சூரிய ஒளி புகாத வண்ணம் இருட்டில் வைத்து மூன்று நாட்கள் கழித்துத் திறந்து பார்த்தால் சாற்றினையெல்லாம் காந்தம் உறிஞ்சி இருக்கும். இந்தக் காந்தத்தை அயக்குறட்டால் எடுத்து ஒரு கிண்ணத்திற்குள் வைத்து மெதுவாகத் தட்டினால் சாம்பல் கொட்டுவது போலக் காந்தரசம் கொட்டும். இந்தக் காந்த ரசத்தினைக் குடக்கரியில் இட்டு வெண்காரத்தோடு சேர்த்து உருக்கினால் தங்கமாக மாறும் என்கின்றார்.

**கொங்கு மண்டலச் சதகம்**

யோகம், மருத்துவம், ரசவாதம் தேகத்தை நலமாக்கிக் கொள்ளும் காயக்கல்பம் முதலிய எட்டு வகையான சித்த முறைகள் ஆகியவற்றையெல்லாம் சொல்லும் போகர், புலிப்பாணி முதலியோர் வீற்றிருந்தது கொங்கு மண்டலமே என்கின்றார் கார் மேகப் புலவர்.

**"யோக வயித்தியம் சொல் ரசவாதம் எல்லாக் கலையும்**
**தேக நிலைபெறும் காயக்கற்ப காயகற்பங்கள் எண் சித்தியும் சொல்**
**போகருடன் புலிப்பாணி முதலிய புண்யரெலா**
**மாக முறவமர் வைகாநகர் கொங்கு மண்டலமே"10**
**(கொங்கு மண்டலச் சதகம், பாடல் எண் - 36)**

முடிவுரை

வலிமையான இரும்பு, மரம், மலை ஆகியவற்றை இழைக்கின்ற அல்லது செதுக்குகின்ற பொழுது தேவையான வடிவங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அதுபோல உடலையும், மனதையும் உடற்பயிற்சியினாலும், மனப்பயிற்சியினாலும் வளப்படுத்தினால் தாங்கள் (சித்தர்கள்) கண்ட எண்வகை சித்திகளை மட்டுமின்றி அதற்கு மேலும் பலவகை உபாயங்களையும் பெறலாம் என்பது சித்தர்கள் இவ்வுலகிற்குக் கூறிச் சென்றுள்ள உண்மையாகும். அவற்றுள் உலகிற்கும், சமுதாயத்திற்கும், உயிர்களுக்கும் நன்மை விளைவிப்பனவற்றை மட்டுமே ஒவ்வொருவரும் பின்பற்றி நோய்நொடி இல்லாத, வன்முறையில்லாத, ஏற்றத்தாழ்வுகள் இல்லாத புதிய உலகைப் படைப்போம்.

**அடிக்குறிப்புகள்**

1. இரா. மாணிக்கவாசகம் - திருமந்திர ஆராய்ச்சி -பக்.28
2. சாமி சிதம்பரனார் - சித்தர்கள் கண்ட விஞ்ஞானமும் தத்துவமும் - பக்.27
3. மு. வரதரசனார் - தமிழ் இலக்கிய வரலாறு -பக்.190
4. சித்தர் பெரிய ஞான கோவை - முதல் பாகம் -பக்.229
5. கொங்கணச்சித்தர் பா.எண் -
6. கடுவெளிச்சித்தர் பா.எண் - ஆனந்தகளிப்பு, பா.எண் -4
7. கொங்கணச்சித்தர் பா.எண் - 173
8. தாயுமானவர் பா.எண் - 7
9. போகர் வைத்தியம் - 700
10. கார்மேகப் புலவர் -கொங்கு மண்டலச் சதகம், பா.எண் -36